# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established : 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 12TH JUNE, 1981 No. 24

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.



**Subscription**

Inland: Rs. 35/- per year. Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to :* **The Manager,** 'Morning Star', Vaddukoddai.


## Emergency Lifted

The state of emergency declared on 4-6-81 was lifted on 10-6-81. The curfew and press censorship also ceased to be operative.

## Church Leaders visit Jaffna

It was significant that soon after the great man-made disaster that overtook Jaffna from the night of the 31st of May onwards one of the very first groups from Colombo to visit Jaffna to see the situation for themselves and help to establish fellowship and understanding was the group of Church leaders from Colombo. His grace the Archbishop of the Roman Catholic Diocese of Colombo, the Most Rev. Marcus Fernando was accompanied by the Rt. Rev. Lakshman Wickremasinghe, the Anglican Bishop of Kurunegalle, the Rt. Rev. Swithin Fernando, the Anglican Bishop of Colombo and the Rev. Soma Perera, the Chairman of the Methodist Church. These leaders who arrived in Jaffna on Wednesday the 3rd of June, looked around and saw the devastation for themselves. They also met leaders of the community, Church leaders in Jaffna and some of the leaders of the political parties. We trust this mission would have helped the people in the South to understand the events clearly. Another of the early visitors to Jaffna soon after the incidents was Mr. Pieter Keuneman, General Secretary of the Communist Party and former M. P. for Colombo Central.

## The Jaffna incidents in a nutshell

On 31-5-81, there was a TULF Election Meeting near Nachimar Kovil (on the suburbs of Jaffna town). Two policemen on duty were shot at. Both succumbed to their injuries one almost immediately and the other subsequently in hospital.

This incident sparked off a flare in the Jaffna town area when some 200 shops belonging to the Municipality were gutted. The house of the M. P. for Jaffna was razed to the ground, the TULF main office destroyed and a wing of the Jaffna Public Library set ablaze. The *Eelanadu* Press was also burnt down.

The incidents were not confined to the Jaffna Town area alone. *The Chunnakam Market* (five miles from Jaffna) suffered extensive damage. The Chunnakam branch of the Jaffna Co-operative and a 'Cool Bar' at the Chunnakam junction were destroyed by fire. Shops in the Kankesanthurai and Nelliady bazaars were also burnt.

Seven civilian lives are reported to have been lost during the week of Terror.

*For the Record*

## TULF Parliamentary Group meets

A meeting of the TULF Parliamentary group met on 9-6-81. The members of the group have formulated five demands which the leader of the Opposition has submitted in Parliament :—

1. Police personnel allegedly responsible for the incidents in the North should be transferred out and 75 percent of the Police force in the Tamil speaking areas should be Tamils and Muslims.
2. All army personnel allegedly involved should be sent out and personnel necessary for security, confined to the barracks.
3. An impartial inquiry must be held by an international organizations as the Amnesty International or International Commission of Jurists.
4. A Home Guard should be set up under the aegis of Develepment Councils to protect lives and property.
5. All miscreants involved in the Jaffna incidents should be identified and punished and redress given to the victims.

Mr. Amirthalingam announced that the TULF would boycott Parliament until adequate steps were taken to meet its demands participating only in the debate of a Vote of Censure which the party hopes to move in collaboration with other Opposition Parties, against two Ministers of State for alleged interference in the Jaffna Development Council Elections.

## Evangelism at the K. K. S. Sanatorium

Messrs, S. Pathmarajah, Suriyakumar Daniel, Wesley Gnanasekaram, Rex Ariaratnam, and Prince Ratnam visited all the wards, met the patients and members of the hospital staff and distributed tracts. This was followed by a Service in the Sanatorium Chapel, conducted by Mr. Prince Ratnam, Worker K. K. S. Church, on Sunday the 31st of May at 10-30 a. m. In all, about 22 people attended the Service. Many present at the Service were non Christians. We are made to understand that this will be one of the regular programmes of the K. K. S. Church and that Services in this Chapel will be held every Sunday at 10-30 a. m.

On the Second Sunday of each month the Rev. D. R. Ambalavanar, the Circuit Pastor for Kankesanthurai will conduct a Holy Communion Service at the Sanatorium Chapel at 6 p. m.

## Thesis on American Contribution

*Mr. S. Jebanesan* of the staff of Jaffna College, Vaddukoddai has secured the Master of Arts Degree from Peradeniya University for his thesis on "*The Contribution made to Tamil by the American Missionaries who served in Ceylon*".

## New Missionary at Jaffna College

*Dr. Robert Porter* has joined the tutorial staff of Jaffna College His speciality is English Literature. He also teaches German and French. A person of wide interests, he has already plunged himself into the life of the school which has been enriched by a long succession of dedicated teachers from America more than for a century.

*Personal*

*Cyrus Selvajeyan Mills* (Bo) has been successful in the Final M. B. B. S. Examination of the Vellore Medical College.

He is the son of the late Mr. C. T. Ethirinayagam Mills and of Mrs. Rasamalar Mills of Green Villa, Manipay.

Selvajeyan won the Gold Medal for the Best sportsman of the Year (1979) at the Medical College.

He is an Old Boy of St. John's College, Jaffna.

*In brief*

- *The Union Bank of Middle East* — the Dubai based bank with an authorised capital of 57 million US dollars opened for business in Colombo on 2-6-81. It hopes to specialise in the promotion of the import and Export trade between Sri Lanka and the Arab World. The General Manager of the Bank is Mr. H. Mc. Hong.
- *The Department of Mass Communication* of the NCC will inaugurate the *Kala Kendra* (Arts Council on 17-6-81 in Colombo. The purpose of the Coucil is to encourage and propagate indigenous forms of art like drama, music, poetry, puppetry etc. etc. Mr. Felix Premawardana is Director / Secretary of the Depatmet.
- *The Batticalloa University College*, according to an order made under the Universities Act by the President. Mr. J. R. Jeyawardene will be established on August First this year. This College, affiliated to the Universities of Peredeniya and Colombo will have a Faculty of Science, a Faculty of Agriculture, and a Department of Animal Science under the Faculty of Agriculture, Economics, Mathematics and Management, will constitute part of the Faculty of Science.

## Visit of Former Missionary

Mrs. Joann Snider, who was serving at Uduvil Girls' Csllege as a Missionary from September 1976 to August 1978 will be on a short holiday in Jaffna from 21st of this month.

## Birth

Mr. & Mrs. E. N. Nesaratnam (Rajah and Mala) of Kuala Lumpur have been blessed with a baby girl, Sonia, on Thursday the 11th June, 1981. The parents and grand-parents Mr. & Mrs. E. V. Nesaratnam and the Revd. and Mrs. Ratnarajah receive this precious gift of God with thanksgiving and praise.

## IN MEMORIAM

IN EVER LOVING MEMORY OF

**Christy Rajakone Saverimuttu**

Died 7th June 1980

*"In chances where*
*our lots are cast*
*Together in the days*
*behind ;*
*I may but say,*
*I hear a word*
*Of memory murmnring*
*the past"*

Fondly remembered by your devoted wife, Sybil and other lovep ones.

27, Central Road,
Batticalloa.

## IN MEMORIAM

IN EVERLOVING MEMORY OF

**Cyrus T. Ethirnayagam Mills**

Called Home : 28-6-1978

*In God's own time our eyes shall see the face we loved so well.*

Fondly Remembered and sadly missed by all his loved ones.

"Green Villa"
Manipay.

- *The following allowances* have been approved for Development Councillors — *Chairman* Rs. 1500 per mensem, Rs. 1500 per mensem, Rs. 500 entertainment allowance, an official vehicle and driver. Executive Committee Members — Rs. 1250 per mensem. Elected Councillors — Rs. 1000 per mensem.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 141 ] 12 — 6 — 1981 [ இதழ் 24


## இலவசக் கல்வி தோல்வியா?

"இலவசக் கல்வித் திட்டம் தோல்வியடைந்துவிட்டதா?" என்ற தலையங்கத்தில் சமீபத்தில் வெளியான ஒரு பத்திராசிரியருக்கான கடிதத்தைக் கண்டோம். இப்படிச் சிலர் வாய்விட்டுக் கேட்கிறார்கள். சிலர் கேட்காமற் தம்மிலேயே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் இலவசக் கல்வித் திட்டம் உண்மையிலேயே பயனற்றதாய்ப் போய்விட்டதெனக் கொண்டு மாற்றுமருந்துகள் கூற முன் வருகிறார்கள். இலவசக் கல்வித்திட்டத்தின் வெற்றி தோல்வியைக் கணக்கிட மூன்று கேள்விகளுக்கு விடைகாண வேண்டியதவசியம். அதைப் பெற்றவர்க்கு அது பயன் தந்ததா? சமுதாயத்திற்குப் பயன் தந்ததா? நாட்டிற்குப் பயன் தந்ததா? இன்னுமொன்றை அறிய வேண்டும் — பயன் தந்திருப்பின் அப்பயன் எவ்வளவு? அதாவது, முதலீட்டிற்குச் சமமான இலாபமா? இல்லையேல், அதால் விளைந்த தீமை எவ்வளவு?

ஒரு தலைமுறை கடந்து இரண்டாம் தலைமுறைப் பிள்ளைகள் இலவசக் கல்வித்திட்டமென்ற இப்பிரமாண்டமான யந்திரத்துக்கூடாக இப்பொழுது சென்று கொண்டிருக்கிறார்கள். போதிய காலம் கடந்தபடியால் இதன் பலா பலன்களைக் கணக்கிட்டு ஆவன செய்வது நம் தலையாய கடன். ஏனெனில் இதைப் பேணிப் பராமரித்து, இயக்கி ஓடவைப்பது பொதுச்சனங்களின் பணமென்பதினாலென்க. நாடு காணும் தற்போதைய இக்கட்டான நிலையில், உள்ளவர்க்கும் இல்லாதோர்க்கும் ஒரு படி கொண்டளப்பது முறையாகுமோ? இல்லாதோர் பெறும் படி உள்ளவர் கொடுக்கட்டும் என்று சொன்னால் அதில் அநீதம் எதையும் காணலாமோ? உணவு முத்திரை விடயமாய் அதைச் செய்கிறோமே.

எனினும் இவைக்கான பரிகாரம் கூறுவது நம் நோக்கமல்ல. கல்வி சம்பந்தமாய் "ஒவ்வாதவை" என நாம காணும் சில அனுபவங்களைக் குறிப்பிட மாத்திரம் விரும்புகிறோம். தேவைக் கேற்றபடி இவை நம் சிந்தனைகளையும் செயல்களையும் நடத்தட்டும்.

இலவசக் கல்வி பெறும் பிள்ளைகளின் பெற்றோரில் எத்தனை பேர் "டியூஷன்" விஷயமாய் வாரியிறைத்துக் கொடுக்காது போகிறார்கள்? உடைமைகளை விற்றுவது கொடுக்கிறார்களே! இந்த "டியூஷன்" கொடுப்பவர்களிற் பெருந்தொகையானோர் பாடசாலைகளின் ஆசிரியரே என்பதும், பல வேளைகளிலும் அதே பிள்ளைகள், அதே பாடத்தை, அதே ஆசிரியரிடம் "டியூட்டரிகளில்" படிக்க வேண்டியிருக்கிறார்கள் என்பதும் பலர் அறிந்த விடயம். அப்படியென்றால் பாடசாலைகளில் நடப்பது என்ன? கொடையாய்க் கிடைத்த குதிரைக்குப் பல் இருக்கிறதோ, விழுந்து விட்டதோ எனக் கணக்குப் பாராதே என்பார்கள். அது போல, பாடசாலையிற் பெறுவது 'இலவசக் கல்வி" என்றதினால் அதைத் தரமற்றதாய்ப் போக விடுகிறார்களோ? அல்லது பணம் கொடுத்துப் பெறுவதுதான் படிப்பெனப் பெற்றோர் கொள்கிறார்களோ?

இலட்சக் கணக்கிற் செலவிட்டு இலவசக் கல்வியைக் கொடுக்கிறோம். கணக்கிலடங்காதவர்க்கு பிற்பாடு வேலைவாய்ப்புக் கொடுக்காமற் போகிறோம். இவர்கள் "கல்வி" யை விட்டுத் "தொழில்" ஒன்றைப் பயிற்சித்திருந்தால் தொழிலையாவது செய்து பிழைத்திருப்பார்கள். இப்பொழுதோ இரண்டுங் கெட்ட நிலையாய்த் தொழில் செய்யும் ஆற்றலுமற்றுப் படிப்புக் கேற்ற வேலையுமற்றுத் திரிகிறார்கள். இவ்வாறு திரிபவர்களே பல விதமான குழப்பங்களுக்கும் காரணிகளாகிறார்கள் என்பது நமது நாட்டின் அனுபவம். கோளாறுகளையாவது புரிந்து தம் நாட்களைக் கழிக்க வேண்டுமென்றிருக்கிறார்கள்.

இல்லையேல், பிறநாடு செல்கிறார்கள். அது நல்லதல்லாமற் தீமையல்ல; பிறநாட்டுச் செலாவணியைத்தானும் பெற்றுத் தருவார்களே! ஆயினும் அவர்களின் தாலந்துகளை நம் நாடே இழந்து போகிறது.

இளம் சந்ததி மத்தியில் விசனத்துடன் நாம் கண்டு வரும் ஒழுக்கமின்மை, அடக்கமின்மையும், இவற்றினால் ஏற்படும் வன்செயல்களும், பிறருக்கும் அவர்கள் உடைமைகளுக்கும் எதிராய்ச் செய்யப்படும் குரோதச் செயல்களும் இலவசக் கல்வியின் பயனானவையென்று சொல்ல நாம் துணிய மாட்டோம். எனினும், ஏதோவொரு தொடர்பு இருக்கக் கூடுமோ? புத்தக அறிவைக் கொடுத்துக் கல்வியைக் கொடுக்காமல் போகிறோமோ? பெற்றவர்க்கு அடங்காமலும் பிறர் சொல் மதியாமலும் கண்டது காட்சி கொண்டது கோலம் என்றாற்போல் கட்டவிழ்த்த பாவனையாய்த் திரியும் நம் வாலிபர் எத்தனை பேர்? இவர்களின் நிலைக்குப் பொறுப்பாளிகள் யார்?

சர்வகலாசாலைகள் "கல்விமான்களை" உருவாக்க வேண்டியவை. அதுவே அவைகள் பணி; வேலை பெறப் பழக்குவதல்ல. அப்படியிருந்தும் அவைகளில் நடப்பதாய் நாம் காணும் தரங் குறைந்த "ரூகிங்", வேலை நிறுத்தம் போன்ற "படிப்பு நிறுத்தம்", அதிகாரிகளைத் தானும் அறைகளிற் பூட்டிவைக்கும் பழக்கம் — இவை கல்விமான்களின் அடையாளம் அல்லவே. இப்பேர்ப்பட்ட நிலைக்குக் காரணந்தான் என்ன?

இன்னோரன்ன காரியங்களே நாம் சிந்திக்க வேண்டியவை. பலதரப்பட்ட காரியங்களுக்கும் விசாரணைக் குழுக்களை வைப்பது போல், நம் வருங்காலச் சமுதாயம் வளர்ச்சியுறவும் நாடு வளம் பெறவும் அத்தியந்த தேவையான கல்வி முறையைத் தேவைக்கேற்றபடி சீரமைக்கும் வகையை ஆய்ந்தறியத் தகுந்தவொரு குழுவை நியமிப்பது நலமெனக் காண்கிறது.

## உயிர்ப்பிக்கப்பட்ட வாலிபன்

அங்கம் 2

[ஆண்டவராகிய இயேசுவினால் உயிர் கொடுக்கப்பட்ட நாயீனூர் விதவையின் மகனைப் பற்றிய இரண்டு குறிப்புக்களை ஏற்கெனவே வெளியிட்டோம். திரு. V. இராஜ்குமார் அவர்கள் எழுதிய மூன்றும் குறிப்பு இங்கே தரப்படுகிறது.]

பாடையிற் கொண்டு
செல்லப்பட்ட அவன்
மரித்தவனாகக் காணப்பட்டான்

அவனால் ஒன்றுமே செய்யக் கூடாதிருந்தது. கண்கள் இருந்தன; ஆனால் அவனாற் பார்க்க முடியவில்லை. காதுகள் இருந்தும் அவனால் எதுவும் கேட்க முடியவில்லை. கால்கள் இருந்தன; ஆனால் நடந்து செல்ல அவனால் முடியவில்லை. கைகள் இருந்தும் அவைகளை உபயோகிக்க அவனால் முடியவில்லை. அழுது புலம்பிக் கொண்டு நின்ற தன் தாய்க்கோ, தன் சேவைகளை பார்த்திருந்த சமுதாயத்திற்கோ அவனால் ஏதும் செய்ய முடியவில்லை. அவன் உயிரற்ற சடலமாய்க் காணப்பட்டான்.

உயிருள்ளவர்களாயிருந்தும் அவனைப் போலவே, தேவைக் கேற்றபடி செயலாற்றுந் திறனற்று, நடைப் பிணங்களாய்த் திரியும் வாலிபர்களினால் இன்றைய சமுதாயம் நிறைந்துள்ளதெனக் கூறுவது மிகையாகாது. சபைக்கும் சமுதாயத்திற்கும் அவர்களால் எவ்வித பயனும் கிட்டுவதில்லை. கண்களைக் கொண்டிருக்கும் தம்மைச் சுற்றிக் காணப்படும் அநீதிகள், அட்டூழியங்களைக் காணாதவர்களாய்ப் போகிறார்கள். வாயிருந்தும் இவ்வித அலங்கோலங்களுக்கு எதிராய்க் குரல் கொடுக்க மாட்டாமல் வாழ்கிறார்கள். கைகள் கால்கள் இருந்தும் தம்மைச் சுற்றிச் சமுதாயத்தில் தவித்துக் கொண்டிருக்கும் ஊனர், எளியவர்க்கு உதவிக் கரம் கொடுக்காமற் போகிறார்கள். சபையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அதன் வேலைக்கும் விருத்திக்கும் உதவியான திறமைகளும் தாலந்துகளும் இருந்தும் அவைக்கென இவைகளை உபயோகிக்காமற் போகிறார்கள். சொல்லப்போனால், தம் சுகத்தையும் பெலத்தையும் திறமையையும் தாலந்தையும் துர்ப்பிரயோக வழியிற் செலவிட்டுப் பல வேளைகளிலும் தீமையை விதைத்துத் தீங்கை அறுக்கிறார்கள். சரீரம் உயிருள்ளதுதான்; ஆத்துமாவோ செத்தது.

மரித்துப் போன வாலிபனை இயேசு பெருமான் கண்டார்; கூப்பிட்டார். கேட்க முடியாதிருந்த செவிகள் கேட்டன. கண்கள் கண்டன; கைகளும் கால்களும் அசைவுற்றன. அவன் உயிருள்ளவனான். உயிருள்ளவொரு அழகு அவனிற் காணப்பட்டது. தன் தாய்க்கும் தன் சனத்திற்கும் உதவக் கூடிய, பிறர்க்காய் வாழக்கூடிய ஒருவனானான்.

அன்பான வாலிப சகோதரனே, சகோதரியே, இன்று உன் நிலை என்ன? "வாலிபனே, எழுந்திரு" என்ற அந்த அதிகார வார்த்தைகளைக் கேட்டிருக்கிறாயா? அதனால் ஒரு புத்துயிரைப் பெற்றாயா? உன் சபைக்கும் உன் சமுதாயத்திற்கும் உன்னைத் தேவையென்று அவர் அழைக்கிறார். உனக்காகவும் உன் நிமித்தமும் அவை விடுங் கண்ணீரைக் கண்டு கலங்குகிறார். உயிர் பெற்றெழு, உன் கரங்களை நீட்டு; அவர் உன்னைத் தூக்கிவிடுவார். மரித்தவனாய் இராதே; உயிர் பெற்றெழுந்திரு. அப்பொழுது உன் நிமித்தம் உன்னைப் பெற்ற தாய் தந்தையர் மகிழ்வர்; உன் சமுதாயம் செம்பிரிக்கும்; உன் சபை உன்னை வாழ்த்தும். நீ அவைக்கு அருமை எனக் கண்டுகொள். அவர் உன்னைக் கூப்பிடவும், உயிர் கொடுத்தெழுப்பிவிடவும், உலகத்திற்குள்ளே செயலாற்றும்படி உன்னை அனுப்பிவிடவும் உன் ஆண்டவராகிய இயேசுவுக்கு ஒரு தருணம் கொடுப்பாயா?

---

செய்திகள்

### மாவட்டச் சபைத் தேர்தல்கள்

இம்மாதம் 4ஆம் திகதியன்று நடத்தப்பட்ட மாவட்டச் சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி பதினொரு வெற்றிகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி 5 வெற்றிகளையும் இந்தளவிற் பெற்றுக் கொண்டன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல்களின் சில வாக்குச் சாவடிகளில் கடமையாற்றிய அதிகாரிகள் குறிக்கப்பட்ட சில பத்திரங்களைச் செவ்வையாய்ப் பூர்த்தி செய்யாதுவிட்டதினால் வாக்கு முடிவுகளைத் தாம் தர முடியாதிருக்கின்றதென யாழ்ப்பாணப் பகுதித் தேர்தல் அதிகாரி கூறியதை யடுத்து யாழ்ப்பாண மாவட்ட சபைக்கான தேர்தல் முடிவுகள் வெளியாக்கப்படவில்லை. நாட்டின் மற்ற 23 மாவட்டங்களில் ஏழு மாவட்டங்கள் போட்டி எதுவும் இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியினால் பெற்றுக்கொள்ளப்பட்டன. இந்தத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், மக்கள் விடுதலை முன்னணி, ஆகியனவும் சில சுயேச்சை வேட்பாளரும் போட்டியிற் சேர்ந்து கொண்டனர். யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர்தலைப் பற்றிய தீர்மானம் தேர்தல் ஆணையாளரிடமிருந்து எதிர்பார்க்கப் படுகிறது.

### கிறிஸ்தவ — இந்துச் சிந்தனைப் பரிமாறல்

கிறிஸ்தவ இறையியலாளர்களுக்கும் இந்து சமய வித்துவான்களுக்குமிடையிலான உயர் மட்டச் சிந்தனைப் பரிமாறல் (Dialogue) ஒன்று சென்ற வாரத்தில் புதுடில்லிக்கு அணித்தாயுள்ள இராஜஸ்தானில் நடத்தப்பட்டது. இது சர்வலோகத் திருச்சபை சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இச் சங்கத்தின் சிந்தனைப் பரிமாறற் பிரிவின் செயலாளராகக் கடமையாற்றும் கனம் உவெஸ்லி அரியராஜா அவர்கள் இதற்குப் பொறுப்பாயிருந்தனர். இலங்கையிலிருந்து, யாழ்ப்பாணச் சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் கைலாசபிள்ளை, இராமக்கிருஷ்ணன் ஆகியோரும், தெ. இ. திருச்சபையின் கொழும்புச் சபைக் குரு கனம் S. S. அருளம்பலம் அவர்களும் இதிற் பங்குபெற்றனர்.

---

மாவட்ட சபைகள் முதல் தடவையாக நிறுவப்படவிருப்பதால் இந்தத் தேர்தல்கள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை யெனலாம். எனினும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் நடந்த பல அசம்பாவிதங்களின் நிமித்தமாக வாக்காளர் பல வகையிலும் சிரமத்துக்குள்ளாக வேண்டியிருந்தது.

# ஆண்டவரின் அடியவர்கள்

(முற்தொடர்ச்சி)

**விளம்பரங்கள்:**

கடவுளின் செய்தியைத் தங்களுக்குத் தெரிவித்தவர்களின் பெயர் தெரியாமலே பலர் வரலாற்றில் மனமாற்றமடைந்து சிறந்த தொண்டர்களாகியுள்ளனர். யார் பேசினால் என்ன? மக்களின் வாழ்க்கை மாறினால் போதும். இன்று பிரசங்கிமாருக்குக் கொடுக்கப்படுகிற விளம்பரங்களைப் பார்த்து இதர சமயத்தவர் நகைக்கின்றனர். இந்த தேவஊழியர் "இன்ன வரமுடையவர், இன்ன வானொலிப் பேச்சாளர், இன்ன பத்திரிகையின் ஆசிரியர்" என்றெல்லாம் நாம் படிக்கிறோம். இதில் வேடிக்கை என்ன தெரியுமா? ஒருவரின் பேச்சுத் திறமையைக் கண்டு வானொலி நிலையம் அவரை அழைத்துப் பேச வைத்தால்தான் அவரை 'வானொலிப் பேச்சாளர்' என்று அழைப்பர். நாமாக நிகழ்ச்சிகள் தயாரித்து, உரிய கட்டணம் செலுத்தி வானொலியில் ஒலி பரப்பிவிட்டு நாம் வானொலிப் பேச்சாளராக அழைக்கப்பட்டால் தவறானதாகும். இதை சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இத்தகைய சிறு காரியங்களில் கூட நாம் நம் பொது அறிவைப் பயன்படுத்தித் தேவையற்ற செயல்களைத் தவிர்க்கலாம்.

இதேபோன்று வெளி நாட்டுப் பிரசங்கியார் என்றால் மக்கள் ஏதோ 'தேவ தூதன்' என்று நினைக்கிறார்கள். அப்பேர்ப்பட்டோர் வரும்போது அவர்களை வைத்துக் கட்டங்கள் நடத்துவதில் சில இந்தியர்கள் பெருமையடைகின்றனர். அவர்களும் நம்மைப் போன்று பாடுகளும் பலவீனங்களுமுள்ள மனிதர்கள்தான் என்று பொதுமக்கள் உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும். உடை அலங்காரங்களை வைத்து மனிதர்களை மதிப்பிடுவது இந்தியர்களின் உதிரத்தில் ஊறிப்போன அறியாமையாகிவிட்டது. இந்த வியாதி நற்செய்தித் துறையையும் பாதித்துவிட்டது.

இவ்வாறு இன்னும் நிறையச் சொல்லலாம். சிந்திக்கும் திறனுடைய ஆண்டவரின் அடியார்களுக்கு இது போதுமென எண்ணுகிறேன். நாம் ஆண்டவரின் சேவையில் அதிகாரிகளாக அல்ல, அடியார்களாகச் செயல்பட ஆண்டவர் அழைக்கிறார். இடைக்காலத் திருச்சபையில் மக்களின் ஆன்மீக வாழ்க்கையை அறிந்த போப்பாண்டவர்களும் பாதிரிமாரும் தீர்மானித்தார்கள். அண்மைக்காலம் வரையிலும் இந்தியக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கைப் பாணியினை மேனாட்டு மிஷனெறிகள் தீர்மானித்தார்கள். இன்று நமது ஆன்மீக வாழ்க்கையைக் குறிப்பிட்ட ஒரு பிரசங்கியார் தீர்மானிக்கிறார். இது ஆபத்தானது. நாம் யாரிடமும் ஆலோசனைகள் கேட்கலாம். ஆனால் நாமாக வாழ்வில் தீர்மானம் எடுத்து ஆண்டவரோடு நெருங்கி வாழ்ந்தால் உறுதியுள்ள விசுவாசிகளாக வாழ்வோம்.

யார் மூலமும் பரிசுத்த ஆவியானவர் செயல்பட முடியும். ஆனால் பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொள்ளப்படும் ஒருவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் பரிசுத்த ஆவியானவரின் வார்த்தையா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். "நீர் ஜீவனுள்ள கடவுளின் குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு அறிக்கையிட்டவுடனே ஆண்டவர் அவனிடம் "நீ பாக்கியவான்; மாமிசமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை; பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்று கூறினார். இவ்வாறு பேசி ஐந்து நிமிடங்களாகவில்லை, "எனக்குப் பின்னாலே போ சாத்தானே, நீ கடவுளுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கேற்றவைகளைச் சிந்திக்கிறாய்" என்று இயேசு அவனை அதட்டினார். (மத். 16:15-23) பரிசுத்த ஆவியானவர் ஏவும் போதே சுயநலம், சாத்தானின் ஏவுதல் இவை ஏற்படலாம் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். கடவுளின் சித்தம் எதுவென்றும் அவரது வெளிப்பாடு எதுவென்றும் நாம் பகுத்தறியும் திறனை ஆண்டவர் தரும்படி நாம் ஜெபிக்க வேண்டும். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கின்றான் என்றும், எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானவற்றைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்றும் புனித பவுல் நமக்குப் புத்தி சொல்கிறார். (1 கொரி. 2:15, 1 தெச. 5:21) வாழ்க்கைப் பயணத்தின் பாதையெங்கும் உயிர்த்தெழுந்த வழிப்போக்கராக நம்மைச் சந்திக்கும் ஆண்டவர் நம்மோடு பேசி சகல உண்மைகளுக்குள்ளும் நம்மை வழி நடத்துவாராக. அவரது கிருபை நம் அனைவரோடுமிருப்பதாக.

## யாழ்ப்பாணத்திற்குச் சபைத் தலைவர்கள் வருகை

சென்ற மாதம் 31ஆம் திகதியிரவு தொடக்கமாக மனிதாபிமானச் செயல்களினால் யாழ்ப்பாணத்தை மேற்கொண்ட பேரிடர்களை நேரிலே பார்க்கவும் ஐக்கியத்தையும் பரஸ்பர நல்லெண்ணத்தையும் உருவாக்கவும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த முதலானவர்களில் ஒரு குழு திருச்சபைத் தலைவர்களைக் கொண்ட ஒன்றாகும். இது குறிப்பிடத்தக்க வொரு சம்பவம்.

ரோமன் கத்தோலிக்கச் சபைக் கொழும்பு மேற்றிராசனத்தின் உயர் மேற்றிராணியார் அருள்திரு மார்க்கஸ் பெர்னாண்டோ அவர்களுடன் கூட ஆங்கிலேய சபையின் குருநாகலை அத்தியட்சர் மகாகனம் லக்ஷ்மன் விக்கிரமசிங்கா, ஆங்கிலேய சபையின் கொழும்பு அத்தியட்சர் மகாகனம் சுவிதின் பெர்னாண்டோ, மெதடிஸ்த சபையின் பேரவை முதல்வர் கனம் சோமா பெரேரா ஆகியோர் இக்குழுவைச் சேர்ந்திருந்தனர்.

இவர்கள் இம்மாதம் 3ஆம் திகதி புதன்கிழமையன்று வந்து இடங்களைச் சுற்றிப்பார்த்து நிகழ்த்தப்பட்டிருந்த பேரழிவுகளை நேரிலே கண்டனர். சமுதாயத் தலைவர்களையும், யாழ்ப்பாணத்தின் திருச்சபைத் தலைவர்களையும் சில அரசியற் கட்சித் தலைவர்களையும் கண்டு பேசினர். இந்தத் தூது கோஷ்டி வருகையின் விளைவாகத் தென்னிலங்கை மக்கள் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களைத் தெளிவாய் விளங்கிக் கொள்வர் என்பதே நமது நம்பிக்கை.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து முதன் முதலாக வந்தவர்களில் இன்னொருவர் பொதுவுடைமைக் கட்சித் தலைவரும் மத்திய கொழும்புத் தேர்தற் பிரிவின் முன்னைநாட் பிரதிநிதியுமான திரு. பீற்றர் கெனமன் ஆவர்.

## செய்திகளின் சாரம்

### வியாபாரத்துறை — பட்டதாரிப் படிப்பு

ஏற்கெனவே வேலையிலிருக்கும் வியாபாரத் துறை, நிர்வாகத் துறை உயர் அதிகாரிகள் ஒரு வருடப் படிப்பைத் தொடர்ந்து இத்துறைகளிற் தராதரப் பத்திரம் பெற்றுக் கொள்ளக் கூடியதாய் கொழும்புச் சர்வகலாசாலை வரும் செப்டெம்பர் மாதம் தொடக்கமாக ஒரு புதிய கல்விப் பிரிவை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான கட்டணம் ரூபா 5,000 ஆகும்.

* * *

### அவசர கால நிலை கடந்தது

மாவட்டச் சபைகளுக்கான தேர்தல் சம்பந்தமாய் நாட்டின் எந்தப் பகுதியிலாவது அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருப்பதற்காக நாடு பூராவும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருந்த அவசர கால நிலைச் சட்டம் இம்மாதம் 10ஆம் திகதியிலிருந்து நீக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவிதங்கள் தொடர்பாகச் சில நாட்கள் வட பகுதியில் ஊரடங்குச் சட்டம் கொண்டுவரப்பட்டதையும் வாசகர் அறிவர்.

* * *

### கோப்பாய்க்குப் புதிய பா. உ.

காலஞ் சென்ற திரு. S. கதிரவேற்பிள்ளை அவர்களின் இடத்தில் கோப்பாய்த் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் திரு. எம். ஆலாலசுந்தரம் அவர்களை நியமிப்பதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நியமனக் குழு தீர்மானித்துள்ளது.

* * *

### உலகின் மிகப் பெரிய சபை

கொரியாவின் சோல நகரத்திலுள்ள ஒரு சபையின் குருவான கனம் போல் சோ என்பவர் சமீபத்தில் அமெரிக்க இறையியற் கல்லூரி ஒன்றிற் பேசிய போது மாத வீதம் தமது சபை 5,000 பேரைச் சேர்த்துக்கொள்கிறதென்றும் 1981ஆம் ஆண்டு முடிவதற்கு முன் தனது சபையாரின் எண்ணிக்கை இரண்டு லட்சம் ஆகுமெனவும் கூறினார்கள். அப்படியானால் அதுவே உலகில் மிகப் பெரிய தனிச் சபையாயிருக்கும்!

* * *

### தேர்தல் — சில விபரங்கள்

மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளரில் 49 89 வீதமானோரே வாக்களித்தனர். 1977 பாராளுமன்றத்துக்கான தேர்தலில் இந்த விகிதம் 93·64. போடப்பட்ட மொத்த வாக்குகளில் ஐ. தே. க. பெற்றது 66·9 வீதமான வாக்குகள் (1977இல் 50·9). பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகையில் இது 33·38 வீதமாகும். (1977இல் 47·68) தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்ட யாழ்ப்பாணம் தவிர்ந்த ஐந்து மாவட்டங்களிலும் போடப்பட்ட வாக்குகளில் த. வி. கூ. 48·08 வீதத்தையும் ஐ. தே. 47·43 வீதத்தையும் பெற்றன; த. வி. கூ. போட்டியிடாத பிற எட்டு மாவட்டங்களில் மக்கள் விடுதலை முன்னணி போட்டியிட்டு போடப்பட்ட வாக்குகளில் 20·27 வீதத்தைப் பெற்றது; ஐ. தே. க. இந்த மாவட்டங்களில் 72 86 வீதத்தைப் பெற்றது.

* * *

### வேத வாசிப்பு மரதன்

நியூயோர்க் நகரிலுள்ள கிறிஸ்தவப் பக்தி முயற்சிச் சங்கம் ஒன்று தொடர்ந்தேச்சியாக 24 மணித்தியாலங்களுக்கு விடாமல் வேதம் வாசிக்கும் மரதன் போட்டியொன்றை நடத்தி இன்னொரு சங்கத்திற்கு நிதியுதவியாக 700 டொலருக்கு (ரூபா 12,600) மேலான ஒரு தொகையைச் சேகரித்துக் கொடுத்துள்ளது.

* * *

### புது முறைப் பரீட்சை

1980 ஆகஸ்ட் மாதம் நடந்த க. பொ. த. (உயர் மட்ட) பரீட்சையின் விஞ்ஞான பாட விடைத் தாள்களில் பல்விடை வினாக்களுக்கான விடைகளை விஞ்ஞானமே தெரியாத கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் சரி பார்த்தனராம்!

## வேதாகம மொழிபெயர்ப்புக்கள்

லண்டன் வேதாகமச் சங்கத்தின் அறிக்கையின் படி இப்பொழுது முழுவேதாகமமும் 275 பாஷைகளில் வெளிவந்துள்ளது. 1980ம் ஆண்டில் வேதாகமப் பகுதிகள் 27 புதிய பாஷைகளில் வெளியிடப்பட்டன. இதையும் கணக்கிட்டால் வேதாகமத்தின் ஏதோ ஒரு புத்தகமாவது இப்போது 1710 பாஷைகளிற் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருக்கிறது. புதிய ஏற்பாடு மாத்திரம் வெளியிடப்பட்டுள்ள பாஷைகளின் எண்ணிக்கை இந்தளவில் 479 ஆகிறது.

## சர்வகலாசாலைகளுக்கான பிரவேசம்

வரும் அக்டோபர் மாதம் ஆரம்பமாகவிருக்கும் சர்வகலாசாலைப் புதிய கல்வி ஆண்டிற்கென அனுமதிக்கப்படவுள்ள மாணவர் தொகைகள், விகிதங்கள் முதலியன தீர்க்கப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானங்களின் படி புதிய கல்வி ஆண்டில் ஆறு சர்வகலாசாலைகளுக்கும் மட்டக்களப்பு, மாத்தறை, ஆகிய இடங்களிலுள்ள இரண்டு பல்கலைக் கல்லூரிகளுக்குமாக 4929 மாணவர் அனுமதிக்கப்படுவர். சென்ற ஆண்டிற் செய்யப்பட்டது போலவே இந்த முறையும் சேர்க்கப்படுவோர் விகிதம் மூன்று பிரிவுகளுக் குட்படுத்தப்பட்டது.

பின் தங்கிய இடங்களின் மாணவர் — 15%.

தகுதியின்படி சேர்க்கப்படுவோர் — 30%.

மாவட்ட ரீதியாகச் சேர்க்கப்படுவோர் — 55%.

பின்வரும் எண்ணிக்கையின் படி அனுமதிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| கலைப் பகுதி | 2275 |
| விஞ்ஞானப் பகுதி | 485 |
| மருத்துவம் | 375 |
| வர்த்தகம் | 325 |
| பொறியியல் | 380 |
| விவசாயம் | 155 |
| உயிரியல் | 339 |
| சட்டப் படிப்பு | 75 |
| பல் மருத்துவம் | 60 |
| கால் நடை மருத்துவம் | 30 |
| பிற பிரிவுகள் | 450 |

சென்ற ஆண்டில் அனுமதிக்கப்பட்டவர் தொகை 4920. ஒவ்வொரு சர்வகலாசாலைக்கும் அனுமதிக்கப்படுபவர் தொகையும் அவர்கள் பெயர் முதலிய பிற விவரங்களும் ஜூலை மாதம் 15ஆம் திகதி வரையில் வெளியாகலாம் எனச் செய்திகள் கூறுகின்றன.

*EDITORIAL COMMENTS*

## On Cataclysmic Events in Jaffna ( May 31 -- June 5 )

### " Dastardly acts "

President Jeyawardena is reported to have told a mammoth gathering in Colombo on 1-6 81 that the people who were responsible for the ' dastardly acts ' in the North have gone out of their senses. In the same breath he is reported to have said that the members of the TULF should disassociate themselves from these acts.

Since making this speech, the President sent his own team to Jaffna comprising the Secretary and Additional Secretary of the Ministry of Defence and the Secretary of the Cabinet, to report to him about the actual situation in the North.

We also know that among the first to arrive after the cataclysm in Jaffna was a team of Church Heads from the South followed by the leader of the Communist Party.

Reports from these sources, far removed from eah other in their ideological affiliations would have, we are sure, given to the President a clearer and fairer picture than the one he had when he made the speech on 1-6-81.

It is now no secret who the alleged "insurgents" were, and who should disassociate themselves from these ' dastardly acts '.

### An Ominous Momentum

The skyful of planes and helicoptors which toucheed down at Palaly at all hours of the day during the days preceeding the election and the unusual conglomerate of motor vehicles that was found in and around *Old Park* were, to the average citizen in Jaffna, a disturbing phenomenon amounting to a foreboding of dismal happenings before the actual eruption on 31-5-81.

It is a sombre reflection that the DC polls in Jaffna intended to inaugurate participatory democracy in this country, as an ultimate solution to the problem of the Tamil speaking minorities should have been overdone in the North to the point of a hostile confrontation between the UNP and the TULF — the former using its political might to challenge the latter in its own fort.

### The Polling Day

Even as the people in Jaffna queued from early morning in front of their booths waiting long hours for ballot boxes which had not arrived, there was a tension never before witnessed in the history of Elections in the North.

All shops were closed because of the looting and destruction on the previous night. News had already gone round that the leader of the opposition and a few TULF MPs have been arrested in the early hours of the morning on election day (4-6-81). The news was at first thought to be the work of rumour mongers. But it was found later to be painfully and surprisingly correct.

In the meanwhile, helpless traders, their faces etched in pain were scurrying in lorries and tractor - trailors, perched precariously atop their piles of goods and movables for safer havens from marauders whose identity even then was not a blank.

We wish the Development Council Election in North ( a flamboyant event in our political annals ) had been held under happier auspices. At any rate there need be no regrets. "An easy conquest" it is said " is no victory ".

### New Depths of Depravity

The burning of a wing of the Public Library ( the Reference Section ) and the ignominy inflicted on a Member of Parliament and his wife are paroxysms of savagery almost without parallel in any civilised country.

" A good book ", we have studied in our school days " is the precious life-blood of master spirits embalmed and treasured up to a life beyond life ".

The burning of books is an act which cries to the conscience of the World. No one can now pass by, the Jaffna Public Library without a knot in his stomach.

It is also ironical that while the government has of late appointed a Select Committee to protect Members of Parliament against malicious reporting in the Press, with a view to giving recognition to their stature in national life, a Member of Parliament in the North has been treated to the utmost ignominy that could be imagined to a man in his position.

In every area of human existence the wheel turns and what today is a fate of a Northern M. P. may well be the fate of an M. P. in the South or East unless every effort is taken to flush out, of their secret abodes, the savages that perpetrated such crimes in the North.

### New Shadows

New shadows have certainly fallen across the country with " the incidents in Jaffna ". For the first time in the history of Parliament, the TULF, as the second largest political party in Parliament has submitted an ultimatum to the government giving five conditions under which they would attend Parliamentary sessions.

The government on its part while making certain haltering admissions about those who were responsible for ' the incidents ' in Jaffna has been vocal in its condemnation of the Eelam cry of the TULF and its supporters and of the death of 19 policemen over the years 1977 — 1981.

What the future has in store for the Tamil speaking people is yet to be seen.

But one thing is patent to any observer of the political scene in Sri Lanka today. Where fear becomes the dominant motive of both government and people, the most important services in a country. are the police and the secret services.

### The Final Goal

Amid the tumultous scenes of last week in Jaffna, we were happy to receive Dr. A. J. Wilson's article on "*Development Councils* a promise he made to us as early as August 1980.

The article, has been well timed and we quote this significant extract where the writer puts his finger on the central issue which colours our time :—

" The scheme grants many of the essentials of the Tamil demand for autonomy. There is ample scope for its improvement in details. The entire set up can be entrenched in the Constitution.

*All this could be a chieved if the leadership on both side. is prepared to co-operate in the working of the new system*

( Italics are ours )

## DISTRICT DEVELOPMENT COUNCILS

*by* **Professor A. J. Wilson**
*Chairman, Department of Political Science*
*University of New Brunswick, Canada*

The States in the Indian and Malaysian federations can, in addition, be coerced in various ways by their central governments. In India, economic development is a subject reserved for the federel centre. An English authority on the Indian political system, Professor W. H. Morris - Jones has stated in his *The Government and Politics of India* that Indian's federal Planning Commission established by Mr. Nehru in 1950 "was one of constitutional structuring in the cause of strong ecntral direction of governmental ceonomic programmes." In 1952 a National Development Council was set up as a high-powered body consisting of the Prime Minister of India as its chairman, the Chief Ministers of all the States and the members of the Planning Commission. This Council began to accure great powers to itself so much so that K. Santhanam a member of the Indian Finance Commission remarked in 1960 that "the position of the National Development Council has come to approximate that of a super-cabinet of the entire Indian Federation, a cabinet functioning for the Government of India and the Governments of all the States."

Nor is the situation in the Federation of Malaysia much different. National economic development is a subject assigned to the Federal Government of Malaysia in the scheme for the distribution of powers between the Federal Government and the State Governments. The Federal Government has used this power, in the name of economic development, to invade the spheres of authority enjoyed by the States in Malaysia. As in the case of the Indian Federation, the Malasian Federation, provides for a National Finance Council which is composed of the Prime Minister of Malaysia, the Federal Minister of Finance and the Chief Minister of all the States.

Both the Indiaa and Malaysian examples bring out two concepts which are valuable for the District Development Councils of Sri Lanka. In practice both in India and Malaysia, despite the sweeping powers enjoyed by the Federal Governments, there is, what political scientists have chosen to call, *bargaining federalism* and *cooperative federalism*. In the world of real politics al that this means is that the Federal Governments and State Governments do not function in water-tight compartments, each asserting their respective powers, as prescribed in their constitutions. No federal system, not even the federal systems of the western world, could function if this were to happen. The fact of the matter is that federal governments enjoy a plenitude of financial powers. They are therefore better placed to coerce their state governments to carry out their policies. When it comes to it however there is a great deal of give and take between federal governments and their state governments. Bargaining and cooperation are therefore the cardinal tenets in any successful federal system of government.

The instruments for a bargaining and cooperative federalism are available in the District Development Councils system of Sri Lanka. The key to the proper working of the system is to be found in the Executive Committees, the cabinets in the districts. unlike in the case of the Indian or Malaysian federations, the Executive Committees cannot be dismissed at will by the central government. As has been stated, if an Executive Committee is dissolved by the President of Sri Lanka, owing to irreconcilable differences between it and the District Minister, *another which commands the confidence* of the District Development Council must

*(to be continued)*

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 12th June, 1981.